## காமில் வலி அஸ் ஸெய்யித் ஷெய்க் கோயாத் தங்களின் கராமத்துக்கள்

எல்லா புகழும் ஏகவல்லோன் ஒருவனுக்கே, ஸலவாத்தும் ஸலாமும் சாந்தி நபி முஹம்மது முஸ்தபா (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீதும், அவர்களது பரிசுத்த குடும்பத்தினர், நற்றவத் தோழர்கள், நல்லடியார்கள் மற்றும் நம் அனைவர் மீதும் என்றென்றும் நிலவட்டுமாக. ஆமீன்.

மனித சமுதாயத்தை நேர்வழிப்படுத்த இறைவன் மனிதர்களிலிருந்து 'நுபுவ்வத்' எனும் நபித்துவம் பெற்ற நபிமார்களையும் 'விலாயத்' தெனும் வலித்துவம் பெற்ற வலிமார்களையும் ஏற்படுத்தினான். இவ்விரு சாராரின் போதனைகளையேற்றறு அவர்கள் காட்டித்தந்த வழிமுறைகளை பின்பற்றி வாழும்போதே நேர்வழியடையமுடியும் என்பது இறைவனது நியதியாகும்.

اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

இறைவா! நீ யாருக்கு உனது நிஃமத்துக்களை வழங்கியுள்ளாயோ அத்தகையோரது பாதையிலேயே எங்களுக்கும் நேர் வழி காட்டிவிடு (சூரதல் பாதிஹா) என தினமும் பர்ழான, சுன்னத்தான தொழுகைகளிலும், இதர வணக்க வழிபாடுகள், அவ்ராதுகளிலும் இவை அல்லாத ஏனைய நேரங்களிலும் சூரதுல் பாத்திஹா ஓதும் போது நாம் கேட்கின்ற துஆவாகும். ஏனெனில் நேர்வழி என்பது அல்லாஹ்வின் அருளைப்பெற்ற நபிமார்கள், ஸித்திக்கீன்கள், ஷுஹதாக்கள், நல்லடியார்கள் வழி நடப்பதன் வாயிலாக மாத்திரமே சாத்தியமானது என்பது அல்குர்ஆன் கூறிக்கொண்டிருக்கும் உண்மையாகும்.

நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களோடு நுபுவ்வத் முற்றுப்பெற்றாலும் அவர்களது வழிவந்த நல்லடியார்கள், பெரியார்கள் இறைநேசர்கள் மூலமாக விலாயத்தெனும் படித்தரம் தொடர்ந்துகொண்டே இருக்கும் அதன்மூலம் இவ்வுலகில் கியாமத்து நாள் வரைக்கும் ஹிதாயத்துக்கான வாயல்கள் திறக்கப்பட்டிருக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

أَلَا إِنَّ أَوْلِيَاءَ اللَّهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ الَّذِينَ آمَنُوا وَكَانُوا يَتَّقُونَ لَهُمُ الْبُشْرَى فِي الْحَيَاةِ الدُّنْيَا وَفِي الْآخِرَةِ لَا تَبْدِيلَ لِكَلِمَاتِ اللَّهِ ذَلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيمُ

(அல் குர்ஆன் 10:62,63,64)

"தெரிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ்வுடைய அவ்லியாக்களுக்கு (கியாமத்து நாளின் கடுமையான நிலை பற்றி) யாதொரு பயமும் இல்லை (துன்யாவுடைய விடயங்களில்) யாதொரு கவலையுமில்லை. அவர்கள் எத்தகையோரெனில்: அல்லாஹ்வை உண்மையாகவே ஈமான்கொண்டு அவனுக்குப் பயந்தும் நடந்துகொள்கின்றனர். இவ்வுலக வாழ்விலும் மறுமையிலும் அவர்களுக்கு உயர்வான அந்தஸ்துக்களைக் கொண்ட நற்செய்தி உண்டு. அல்லாஹ்வுடைய வாக்குறுதிகளில் எவ்வித மாறுதலும் இருக்காது. இதுதான் மகத்தான வெற்றியாகும். (அல் குர்ஆன்: 10:62,6,64)

மேற்கூறிய இறைவசனம் அவ்லியாக்கள் பற்றியும் அவர்களுக்கு அல்லாஹுத் தஆலா வழங்கியுள்ள அந்தஸ்துக்கள் பற்றியும் தெளிவாக எமக்குப் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறு இறைநேசர்களுக்கு இறைவன் வழங்கியுள்ள அந்தஸ்துக்களில் ஒன்றே 'கராமத்' எனும் அற்புதங்கள் நிகழ்த்தும் ஆற்றலாகும். ஆகவேதான் நபிமார்கள், றஸூல்மார்கள் மூலம் இறைவன் வெளிப்படுத்தும் அற்புதங்களுக்கு 'முஃஜிஸாத்' என்பதுபோல வலிமார்கள் மூலம் அவன் வெளிப்படுத்தும் அற்புதங்களுக்கு 'கராமத்' என்கின்றோம். இவ்வாறான அற்புதங்கள் மூலம் இறைவன் வலிமார்களை கண்ணியப்படுத்திய அதேவேளை மக்களுக்கு அவர்கள் மீதுள்ள நம்பிக்கையையும், மரியாதையையும் அதிகரிக்கச்செய்தான்.

அந்த வகையில் உலக வரலாற்றில் எல்லாப் பகுதிகளிலும் பல்வேறு வலிமார்கள், நல்லடியார்கள் தோன்றி இஸ்லாத்துக்காகவும் மக்களின் ஈருலக ஈடேற்றத்துக்காகவும் பணியாற்றியுள்ளார்கள். தற்காலத்திலும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் கியாமத்து நாள்வரைக்கும் அவர்களது பணிதொடரும் என்பது ஆதாரங்கள் மூலமாக நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். உலகின் நாலாபுறங்களிலும் மஸ்ஜிதுகள், தக்கியாக்கள், ஸாவியாக்கள், மத்ரஸாக்களை நிறுவி தீனுல் இஸ்லாத்துக்கு இம்மகான்கள் புத்துயிர் அளித்தார்கள். திக்ரு மஸ்லிஸ்கள், மெய்ஞ்ஞான உபன்னியாசங்கள், நற்பழக்க வழக்கங்கள் என பல்வேறு முறைகளுடாகவும் மக்களுக்கு தஸவ்வுப் எனும் இறைஞானக்கல்வியை புகட்டினார்கள்.

இந்த வரிசையில் இலங்கைத்திருநாட்டில் சூபித்துவத்தின் வளர்ச்சிக்கும் தரீக்காக்களின் எழுச்சிக்கும் அரும்பணியாற்றிய இறைநேசர்களுள் அதி சங்கைக்குரிய அஸ்ஸெய்யித் செய்க் கோயாத்தங்கள் அவர்கள் முக்கியமானவர்களாகும்.

இலங்கையில் அநேகமான பிரதேசங்களில் 'அப்துர் ரஷீத் தங்கள்', வைத்தியத் தங்கள் எனும் பெயர்களாலும் சில பிரதேசங்களில் 'மௌலானா வாப்பா' எனும் பெயராலும் அறியப்பட்டிருந்த தங்கள் வாப்பா அவர்கள் இந்தியாவின் அந்தரூத் தீவைச் சேர்ந்தவர்கள். நபி வழி பரம்பரையைச்சேர்ந்த தங்கள் நாயகம் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 34 ஆவது தலைமுறையினையும் குதுபுல் அக்தாப் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்களின் 22 ஆவது தலைமுறையினையும் கொண்டவர்கள். தமது மாமாவோடு 1944 ஆம் ஆண்டு தங்களது சிறுபராயத்திலேயே இலங்கைக்கு வருகை தந்த தங்கள் நாயகம் அவர்கள் ஆரம்ப காலங்களிலே அவர்களோடு இணைந்து ஆன்மீகப் பணிகள் செய்தார்கள். பின்னர் தரீகாவின் கிலாபத்தையும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்ட தங்கள் நாயகம் அவர்கள் மிகப்பெரும் இறைநேசராகவும் பல அற்புதங்கள் நிகழ்த்திய வலியாகவும் திகழ்ந்தார்கள். தெஹிவளை அல் ஜாமிஅதுல் கௌஸிய்யா அரபுக்கலாசாலை மாத்திரமன்றி, இலங்கையின் பல பாகங்களிலும் தரீகாக்களின் அமல்களை நடாத்த தைக்காக்களையும், ராதிப் மஜ்லிஸுகளையும் தங்கள் நாயகம் அவர்கள் நிறுவினார்கள். தங்களிடம் ஞான தீட்சை பெற்றோருக்கும் தங்களது அன்பை நாடி வருவோருக்கும் ஆன்மீகப்பாதையை திறந்து காட்டினார்கள். குதுபு நாயகத்தின் பெயராலும் ரிபாயி நாயகத்தின் பெயராலும் மனாகிபுகளையும் கந்தூரிகளையும் ஆரம்பித்து அப்புனித சபைகளிலே தெவிட்டாத தொனியிலே பயன்மிக்க உபன்னியாசங்கள் பல புரிந்து ஆன்மீகக் கருத்துக்களையும் இறை நெறியையும் தஸவ்வுபையும் போதித்தார்கள்.

தங்கள் நாயகம் அவர்களுக்கு வல்ல இறைவன் வழங்கிய கராமத்துகள் எண்ணிலடங்காதவை. அவற்றை விலாவாரியாக விளக்கிக்கூற இச்சிறு ஆக்கம் போதுமானதல்ல. அன்னாரின் நெருக்கத்தைப் பெற்ற ஒவ்வொருவரும் அவர்களின் அந்தஸ்தையும் கராமத்துக்களையும் அறிந்தது மாத்திரமன்றி இன்றும் அவற்றின் அநுகூலங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். தனிமனிதர்கள் மாதத்திரமன்றி ஒட்டுமொத்த சமூகமும் நன்மைபெறும் வகையில் பல்வேறு சேவைகளையும் அற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார்கள். அந்தவகையில் பட்டுபிடிய, பழைய அல்பிடிய – வெலிகெல்ல, காத்தான்குடி, காங்கயன்ஓடை உள்ளிட்ட இலங்கையின் பல பிரதேசங்களில் இவர்கள் நட்டுவைத்த விசமுறிஞ்சும், வாதமகற்றும் புனித கற்களால் இன்றும் மக்கள் பயன்பெற்றுவருவது அவர்களின் அசைக்கமுடியா அற்புதங்களாகும். அதுபோன்று மழையின்றி வரட்சி நிலவிய பல்வேறு சந்தர்ப்பங்களில் தங்களது துஆவின் மூலம் மழைபொழியச்செய்து மக்களது வாழ்வில் செழிப்பூட்டினார்கள். இவ்வாறு அவர்களது கராமத்துகளில் பொது நலன் சாரந்தவை ஏராளமானதாகும்.

மாத்திரமன்றி, சூபியாக்களிடம் காணப்படும் உயரிய அற்புதமான "கஷ்பு" எனும் திரையற்ற அகப்பார்வை கொண்டவர்களாக தங்கள் நாயகம் அவர்கள் காணப்பட்டார்கள். அவர்களது பல்வேறு கராமத்துக்களில் இத்தன்மை வெளிப்பட்டிருக்கின்றது. பின்வரும் செய்தி இதற்கு சிறந்த உதாரணமாகும். இது ஒரு நீண்ட சம்பவம். இதன் ஒவ்வொரு கட்டத்திலும் தங்கள் வாப்பாவின் பல கராமத்துக்கள் உள்ளடங்கியிருக்கின்றன. இயலுமானவரை சுருக்கமாக பார்ப்போம்.

காலம்சென்ற மர்ஹூம் இக்பால் ஹாஜியார் அவர்கள் தங்கள்வாப்பாவின் முரீதுகளில் அனைவருக்கும் பரீட்சயமானவர். அவர் 'மேமன்" சமூகத்தைச்சேர்ந்தவர். அவருடைய வாழ்கையையே புரட்டிப்போட்ட வரலாற்றை இத்தருணத்தில் பகிர்ந்துகொள்வது மிகப்பொருத்தமானது என நினைக்கிறேன். இந்த செய்தியை அவரது மகன் சாஜித் (Captain - Sri Lankan Air Lines) அவர்கள் தனது தகப்பனும் தாயும் பல முறை தனக்கு கூறியதன் பிரகாரம் அறிவிக்கிறார். இவரும் அவரது தந்தை போன்று தங்கள்வாப்பாவின் முரீதுகளிடையே மிகவும் பரீட்சயமானவர்.

இக்பால் ஹாஜியார் அவர்கள் திருமணம் செய்து பல வருடங்களாகியும் அவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் இருக்கவில்லை. மாணிக்கக் கல் வியாபாரியான இக்பால் ஹாஜியார், பொருளாதாரத்திலே தன்னிறைவுகண்டிருந்தபோதும் தனக்கோர் வாரிசு இல்லாதது அவரையும் அவரது துணைவியாரையும் கடுமையான மனவுளைச்சலுக்குள்ளாக்கியது. இலங்கையிலும், இந்தியாவிலும் அன்றிருந்த பிரபல்யமான மகப்பேற்று விஷேட வைத்திய நிபுணர்களிடம் ஆலோசனைகள் பெற்றபோதும் எதுவும் கைகூடவில்லை. ஆய்வுகூடப் பரிசோதனைகளின் அடிப்படையில் அவரது துணைவியாருக்கு தாய்மை அடையும் சந்தர்ப்பம் இல்லை என்றே அனைத்து வைத்தியர்களும் கூறியிருந்தனர். இந்நிலையில் அவரது மனைவியின் சகோதரருக்கு 1983 பெப்ரவரி மாதம் குழந்தையொன்று கிடைத்ததைத்தொடர்ந்து குழந்தையில்லை என்ற கவலை இவர்களுக்கு மேலும் உக்கிரமடைந்திருந்தது. இத்தருணத்தில் வியாபார தொடர்புகள் நிமித்தம் அவர்களது குடும்ப நண்பரான முபாரக் ஹாஜியார் என்பவர் இவ்விடயம் அறிந்து இக்பால் ஹாஜியாரிடம் தங்கள் வாப்பா பற்றியும் அவர்களது கராமத்துகள் பற்றியும் எடுத்துக்கூறி தங்கள் வாப்பா அவர்களை சந்தித்தால் உங்களுக்கு ஏதாவது வழிபிறக்கும் எனத்தெரிவித்தார். சுன்னது வல் ஜமாஅத்து கொள்கையல்லாத வேறு தவறான கொள்கையில் அந்நேரம் நம்பிக்கைகொண்டிருந்த இக்பால் ஹாஜியார் அதனை ஒரு பொருட்டாகவே கருதாது மறுத்துவிட்டார். அதேவேளை, நண்பர் முபாரக் அவர்கள் இச்சேதியை இக்பால் ஹாஜியாரின் மனைவியிடமும் கூறியிருந்தார். மனைவியின் விடாப்பிடியால் ஒருவாறு இக்பால் ஹாஜியார் தம்பதியினர் நண்பர் முபாரகோடு 1983 பெப்ரவரி 21 ஆந் திகதி அந்நேரம் கெலிஓயாவில் இருந்த தங்கள் வாப்பா அவர்களை காணச் சென்றார்கள். தனது மனைவியை வாகனத்தில் இருத்திவிட்டு ஹாஜியார் மாத்திரமே தங்கள் நாயகம் அவர்களிடம் பெரியதொரு எதிர்பார்ப்பின்றி மனைவியின் வற்புறுத்தலினாலே தான் வந்தது போன்றதோர் தொணியில் தனது பிரச்சனையைக் கூறினார். அப்போது தங்கள் வாப்பா அவர்கள், "அப்படியா மகன்!, எனக்கேட்டுவிட்டு அவர்கள் கண்டியில் தங்கியிருப்பதையும் உறுதிசெய்துகொண்டு "நாளை காலை வாங்க மகன் நான் இன்றிரவு ரிபாய் நாயகத்திடம் கேட்டுச் சொல்கிறேன்". என்றார்களாம். தங்கள் வாப்பா அவர்கள் இவ்வாறு கூறியது இக்பால் ஹாஜியாரை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. தான் அச்சமயம் வேறு கொள்கை சார்ந்வனாக இருந்தாலும் அவரது தந்தை உண்மையானதொரு தரீக்காவாதியக வாழ்ந்தவர். குதுபு நாயகம், ரிபாய் நாயகம், கரீபே நவாஸ் ஜிஸ்தி நாயகம் போன்ற பெரியார்களது பெயர்கள் தனது தந்தை மூலமாக செவியுற்றவைகளாகவும் அவர்கள் தற்போது ஹயாத்துடன் இல்லை என்பதையும் அறிந்திருந்தார். இவ்வாறிருக்க மரணித்த ரிபாய் நாயகத்துடன் எவ்வாறு கேட்க முடியும் என்பதே இவருக்கு அதிர்ச்சியும் ஆச்சரியமுமாக இருந்தது. மறு நாள் விடியும் வரை அன்றிரவு அவரால் சரியாக துங்கமுடியாமலிருந்ததாக தனது மகனிடம் பின்னர் குறிப்பிட்டிருந்தார்.

மறுநாள், தங்கள் நாயகம் அவர்களை சந்தித்தபோது, "மகன்! உங்களுக்கு குழந்தையொன்று இருக்கின்றது. உங்கள் மனைவியின் அடுத்த சுத்தகாலப்பகுதியில் குழந்தை உண்டாகும். அது பெண் பிள்ளை, அப்பிள்ளைக்கு சாஜிதா என்று பெயர்வையுங்கள். கர்ப்பம் தரித்து மூன்றாவது மாதத்தில் என்னை வந்து சந்தியுங்கள். நாங்கள் உங்கள் ஊருக்கு சென்று ஒரு வைத்தியம் செய்யவேண்டியுள்ளது என்றார்களாம்". தங்கள் வாப்பா அவர்களின் வார்த்தையின் ஆழத்தை அச்சமயம் அவரால் உணரமுடியாமல்போனாலும், தங்கள் அவர்கள் கூறியது போன்றே அடுத்த மாதம் அவரது மனைவி கருவுற்றிருப்பது உறுதிசெய்யப்பட்டபோது அவர் அதிசயத்தால் உறைந்தேபோனார்.

இந்த இடத்தில் தங்கள் வாப்பா அவர்களுக்கு ரிபாய் நாயகத்துடன் இருந்த தொடர்பு, 'கஷ்ப்' எனும் திரையற்ற பார்வை மூலமாக எவ்வித மருத்துவங்களோ தல்சமாத்துகளோ இல்லாது குழந்தையுண்டாகும் என்பதை முன்னறிவிப்புச் செய்தமை, அது பெண் குழந்தை என உறுதிசெய்து, அதற்கான பெயரையும் கூறுவதென்பது சாமான்யமானதொரு விடயமல்ல என்பதை உற்றுஉணர வேண்டியுள்ளது. விஞ்ஞான வளர்ச்சிகண்ட இக்காலகட்டத்தில் குழந்தைகள் விடயத்தில் அதிசக்திவாய்ந்த தொழிற்நுட்ப நுண்ணாராய்வுக்கருவிகளின் அறிக்கைகளே பொய்த்துப்போகின்ற போது, தங்கள் வாப்பாவின் மிகத்துல்லியமான கராமத்து எம்மையெல்லாம் மெய்சிலிர்க்கவைக்கின்றது. அந்த தாயை குழந்தை பெறுவதற்கே தகுதியற்றவர் என்று கூறிய வைத்தியர்களை மூக்கின் மேல் விரல் வைத்து வியக்கவைத்தது. இவர்களது கர்ப்பத்தை உறுதிசெய்த பிரபல மகப்பேற்று வைத்தியர் Dr. யாகூப் அவர்கள் இந்த அதிசய சம்பவத்தைத் தொடர்ந்து தங்கள் வாப்பாவின் சபைகளை நாடிவரத்தொடங்கினார் என்பதும் தங்கள் வாப்பாவோடு சகவாசத்தை பேண ஆரம்பித்தார் என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டிய வரலாறாகும்.

சரியாக மூன்றாவது மாதத்தில், தங்கள் வாப்பாவை தனது சொந்த ஊரான பலாங்கொடைக்கு அழைத்து வரும்போது தங்கள் வாப்பாவின் வலித்துவத்தின் மீது பரிபூரண நம்பிக்கையுடனும் மிகுந்த மரியாதையுடனும் இக்பால் ஹாஜியார் அழைத்துச்சென்றார். வழியில் மற்றுமோர் எதிர்பாராத அதிசய நிகழ்வு இடம்பெறுகிறது. தங்கள் நாயகம் அவர்களே! எனக்கு ஒரு குழந்தை என்றீர்கள், அதுவும் பெண் குழந்தை என்றீர்கள். நான் சார்ந்த சமூக வழக்காறின் படி பெண்பிள்ளை திருமணத்தின் பின்னர் கணவரின் வீட்டுக்குச்சென்றுவிடும். நான் மீண்டும் வெறுமையாகிவிடுவேன். எனக்கு அது ஆண்குழந்தையாக இருந்தால் நன்றாக இருக்குமே என்று இக்பால் ஹஜியார் கேட்க, தங்கள் நாயகம் அவர்கள் அப்படியா மகன்! சரி அது ஆண்குழந்தையாகவே பிறக்கட்டும். ஏன்றார்களாம். "சுப்ஹானல்லாஹ்". இத்தனைக்கும் தங்கள் நாயகம் அவர்கள், எவ்வித ஆன்மீக வைத்தியங்களோ, அவ்ராதுகளோ வழங்கியிருக்கவில்லை. தங்கள் வாப்பா அவர்கள் தங்களது வாயால் சொல்வதை வல்லநாயன் நிதர்சனமாக்கிக்கொண்டிருந்தான். அப்படியானால் தங்கள் வாப்பா அவர்களுக்கு வல்ல நாயன் வழங்கியிருந்த விலாயத்தின் வலிமை எவ்வளவு பெறுமதியானது என்பதை வார்த்தைகளால் வடிக்கமுடியாதுள்ளது. அதன் பின்னர் குழந்தையின் சீரான வளர்ச்சிக்காக தங்கள் வாப்பா அவர்கள் சில ஆன்மீக வைத்தியங்களை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறே அவர்களுக்கு ஆண்குழந்தை ஒன்று எவ்வித குறைகளுமின்றி நிறை மாதத்தில் 19.01.1984 அன்று பிறந்தது. அக்குழந்தைக்கு 'ஸாஜித்' என பெயரிட்டார்கள். அவரே, இச்சேதியை அறிவிக்கிறார். இவர் தற்சமயம் இலங்கை விமான சேவையில் விமானியாகக் (Captain) கடமையாற்றிவருகிறார்.

إِنَّ اللّٰه تَعَالَى قَالَ:........................ وَمَا يَزالُ عَبْدِي يتقرَّبُ إِلى بالنَّوافِل حَتَّى أُحِبَّه، فَإِذا أَحبَبْتُه كُنْتُ سمعهُ الَّذي يسْمعُ بِهِ، وبَصره الَّذِي يُبصِرُ بِهِ، ويدَهُ الَّتي يَبْطِش بِهَا، ورِجلَهُ الَّتِي يمْشِي بِهَا، وَإِنْ سأَلنِي أَعْطيْتَه، ولَئِنِ اسْتَعَاذَنِي لأُعِيذَّنه
..............
رواه البخاري

"…. என் அடியான் அதிகமான சுன்னத்தான (பர்ழான வணக்கங்களுடன்) வணக்கங்கள் மூலம் என்னை நெருங்கிக்கொண்டே இருப்பான். இறுதியில் நான் அவனை நேசிப்பேன். ஆவ்வாறு நான் அவனை நேசித்துவிட்டால் அவன் கேட்கும் செவியாக, பார்க்கும் கண்ணாக, அவன் பற்றுகின்ற கரமாக அவன் நடக்கின்ற காலாக நான் ஆகிவிடுவேன். அவன் என்னிடம் யாதேனும் கேட்டால் நான் நிச்சயம் அதனை வழங்குவேன். என்னிடம் பாதுகாப்புக்கோரினால் நிச்சயம் நான் அவனுக்கு பாதுகாப்பு அளிப்பேன்….."(புகாரி) என இறைவன் சுப்ஹானஹு தஆலா ஹதிஸ் குத்ஸியிலே கூறியிருப்பது இவ்விடத்தில் சுட்டிக்காட்டப்படவேண்டியதொரு ஹதீஸாகும். இத்தனை அந்தஸ்த்துகளை தன்னகத்தேகொண்டிருந்தும் மிகவும் எளிமையான இறையடியாராக தங்கள் வாப்பா வாழ்ந்தார்கள் என்றால் அது மிகையாகாது.

அற்புதங்கள் தொடரும்…

இவ்வண்ணம்
خَادِمُ الغَوْثِيَّةْ
காதிமுல் கௌஸிய்யாஹ்



بسم الله الرحمن الرحيم

**MIRACLES OF AS SEYYID AS SHEIKH KOYA THANGAL**

All praise is for Allah ﷻ the Glorified and the Exalted, and may He ﷻ shower His choicest peace and blessings on the Sole Owner of the subtle essence and meaning of being, Sayyidina wa Nabiyyina wa Habibina wa Mawlana Muhammadh ibn 'Abdillah ﷺ,
and on their purified families whom Allah ﷻ commanded the believers to Love them most, the companions whom Allah praised as the stars of guidance and the spring of assistance, their successors, and the successors of the successors, and all those who follow them with righteousness until the Day of Judgment Aamin.

Allah's ﷻ the Glorified and the Exalted, institution of prophethood Nubuwwah) which began with Prophet Adam alaihissalam and culminated in Our Prophet Muhammadh ﷺ Allah ﷻ bestowed the Sainthood (wilayah) and Prophethood Nubuwwah both to ﷺ and sealed the Prophethood and Islam as the final religion for all mankind forever.

The Prophet ﷺ left behind the clear path for mankind which their Companions, and successors followed and established their law, upheld their way, and held fast to it as a belief and practice a moral manner.

ٱهْدِنَا ٱلصِّرَٰطَ ٱلْمُسْتَقِيمَ صِرَٰطَ ٱلَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

Yaa Allah ﷻ Guide us upon the straight path The path of those upon whom You have bestowed favor, The guaranteed route which will take us towards Allah ﷻ The (wilayah) is a reality which comes into existence as the result of the putting into practice the straight path in a man's life.

أَلَا إِنَّ أَوْلِيَاءَ اللَّهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ الَّذِينَ آمَنُوا وَكَانُوا يَتَّقُونَ لَهُمُ الْبُشْرَى فِي الْحَيَاةِ الدُّنْيَا وَفِي الْآخِرَةِ لَا تَبْدِيلَ لِكَلِمَاتِ اللَّهِ ذَلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيمُ

Behold! verily on the friends of Allah ﷻ there is no fear, nor shall they grieve; Those who believe and constantly guard against evil ( have Taqwa ) For them are glad tidings, in the life of the present and in the Hereafter, no change can there be in the words of Allah ﷻ This is indeed the supreme felicity.
Qur'an 10:62-64

Those who followed the straight path are bestowed with glad tidings by Allah and among them the founder of AL-Jamiathul Ghawsiyyah our Sheikh His Holiness As Seyyid Sheikh Koya Thangal (qadhdhasallahu sirrahul azeez) who hailed from Androth Island in India is well known Saint (Waliyullah) in Sri Lanka.

The founder of AL-Jamiathul Ghawsiyyah His Holiness As Seyyid Sheikh Koya Thangal (Also known as As Seyyid Abdhur Rasheed Thangal Waapa ) Visited Ceylon in 1944 at 13 years with His Uncles and thereafter started to visit in 1948 at 17 years till the end of 1996. His Holiness's mercy and services to the Muslim community in this Island are immense and innumerable, His Holiness have erected miraculous stones which absorbs poison in many places in the island from which impartial of races all are benefited.

In the Holy Month of Safar the disciples and devotees fondly celebrate His Holiness's annual Remembrance Day on the 22nd of Safar, and it is highly devotional. It seems very useful to mention His Holiness's miracles (Kira'ma) in this holy month of Safar.

Iqbal Haji (Sri Lankan Airline Captain Sajid's father) is well known to most of our Mureedeens and Muhibbeens. Before Captain was born his parents were so anxious to have a child, but the time didn't permit, they underwent almost every possible medical treatments and method but nothing worked as they anticipated. Ones when Iqbal Haji was discussing this matter with his friend named Mubarak Haji, he had consoled Iqbal Haji to not to worry that he knows a Saint who is having spiritual powers and that he will take him there,

even though Iqbal Haji didn't have the faith at that moment of time, because of his anxiousness to have a child he agreed to visit . And finally they went to Gelioya to see the Saint Thangal Waapa, met them and explained the sorrowful story of trying to have a child. The merciful characteristic Thangal Waapa smiled and entertained them and had told "Nalaiku waanga mahan naan Rifaai Naayahaththikkitta Kettittu cholren "Subhanallah!!!

All three had left to the hotel where they were boarded in Kandy and Iqbal Haji was counting hours to get back tomorrow to find out the result of Rifaai Naayaham, next day when they met Thangal Waapa, they revealed that his wife on her next purification would conceive a baby girl and Insha Allah to name the child as "Sajidha" and to meet them three months after conception. As per Thangal waapas' verdict Iqbal Haji's wife conceived and the joyful Iqbal Haji went to meet Thangal waapa to invite them home, Thangal waapa agreed and while traveling Iqbal Haji had told Thanga waapa, waapa..... you told me that we'll get a baby girl, if it is so, I won't have anyone to look after me and if I could have a boy it would be much better. Hearing this Our Thangal waapa had told "Nallam mahane Aambula pulla kidaikum" 'Subhanallah' this "Aambula pulla" only Captain Sajidh Iqbal who is also a devotee of Thangal waapa. Mash Allah Our Thangal Waappa is a Shekhul Kamil, their miracles not only this there are plenty Insha Allah we'll post one by one.

By

خَادِمُ الغَوْثِيَّةْ

**Khadhimul Ghawsiyyah**

